සංහිඳියා යාන්ත්‍රණ උදෙසා ප්‍රවිචාරණ කාර්ය සාධක බලකාය
සංහිඳියා යාන්ත්‍රණ සම්බන්ධීකරණ ලේකම් කාර්යාලය, ජනරජ ගොඩනැගිල්ල, ශ්‍රීමත් බැරන් ජයතිලක මාවත, කොළඹ 01

நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான ஆலோசனை செயலணி
நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம், குடியரசுக் கட்டிடம், சேர்.பாரோன் ஜயதிலக வீதி, கொழும்பு1

Consultation Task Force on Reconciliation Mechanisms
*Secretariat for Coordinating Reconciliation Mechanisms, Republic building, Sir Baron Jayathilaka Mw., Colombo 01.*

Phone : +94 11 5920029 www.scrm.gov.lk
Fax : +94 112325620 contact@scrm.gov.lk

# செய்திவெளியீடு

## நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான வடிவமைப்பிற்கான தொடரறா சமர்ப்பிப்புகள் தற்போது நேரடியாக

பிரதமரால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஆலோசனைச் செயலணி, நல்லிணக்க பொறிமுறைகளின் வடிவமைப்புப் மீது பங்குதாரர்கள், நிபுணர்கள் மற்றும் பொது மக்களுடைய கருத்துக்களை நாடுவதற்காக தொடரறாச் சமர்ப்பிப்புகளை ஆரம்பித்துள்ளது

இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைகளில் காணாமற்போனோருக்கான அலுவலகமும்; உண்மை, நல்லிணக்கம், நீதி மற்றும் மீள்நிகழாமை ஆணைக்குழுவையும், பொறுப்புக்கூறும் பொறிமுறை மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகமொன்றையும் உள்ளடக்குகின்றது.

தொடரறா சமர்ப்பிப்புகளுக்கான வினாக்கொத்து தற்போது நேரடியாக நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் மும்மொழி வலைக்கடப்பிடத்தில், www.scrm.gov.lk, காணப்படும். இணைய சமர்ப்பிப்பு செயல்முறைக்கு மேலதிகமாக, நகர மண்டபக் கூட்டங்கள், மையக்குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் ஊடக நேருக்குநேர் ஆலோசனைகள் நாடுமுழுவதிலும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.

---###---